ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2281/33 - 2022 මැයි මස 27 වැනි සිකුරාදා - 2022.05.27
*2281/33 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**அறிவித்தல்**

*ச.வ.பி. 21/78* (XVI) (ஆ)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.*

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள்
ஆணைக்குழு.

கொழும்பு,
*2022, மே 24.*

**கட்டளைச் சட்டம்**

*2008 ஆம் ஆண்டின் ஒற்றோபர் 16 ஆந் தேதிய 1571/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழக கமத்தொழில் தொழில்நுட்பவியல் மற்றும் கிராமிய விஞ்ஞானங்களுக்கான நிறுவகக் கட்டளைச் சட்டம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-*

*(1)* அதன் 8 ஆம் பந்தியின் (1) ஆம் உட்பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுக :-

"(1) பணிப்பாளர் நிறுவகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராகவும் பிரதான கல்விசார் அலுவலராகவும் இருத்தல் வேண்டும். அவர் நிறுவகத்தின் சவையினதும் நிறுவகத்தின் கல்விசார் கூட்டவையினதும் மற்றும் எல்லா

1A - PG 5847 — 66 (2022/05)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

கற்கை சபைகளினதும் பதவிவழி உறுப்பினரொருவராதல் வேண்டும். பணிப்பாளர் நிறுவனத்தின் சபையினதும், கல்விசார் கூட்டவையினதும் மற்றும் நிறுவகத்தின் கற்கைகள் சபையினதும் ஏதேனும் கூட்டத்தில் தனது சொந்த வாக்குடன் சேர்த்து அறிதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். அவர் நிறுவகத்தின் வேறோர், வேறு ஏதேனும் அதிகாரசபையினது அல்லது குழுமத்தினதும் கூட்டத்தில் சமூகமாயிருப்பதற்கும் அதில் உரையாற்றுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும். ஆனால் அவர் அத்தகைய அதிகார சபையின் அல்லது குழுமத்தின் உறுப்பினர் ஒருவராக இருந்தாலன்றி அத்தகைய கூட்டம் எதிலும் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதல் ஆகாது.";

(2) அதன் 10 ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுக :-

"10. சபையானது நிறுவகத்தின் கல்விசார் மற்றும் நிறைவேற்றுக் குழுமமாயிருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வருவோரைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(1) பதவிவழி உறுப்பினர்கள், அதாவது :-

(அ) பணிப்பாளர் இவர் தவிசாளராதல் வேண்டும் ;
(ஆ) பிரதிப் பணிப்பாளர் ;
(இ) உயர்கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;
(ஈ) கமத்தொழில் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;
(உ) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;
(ஊ) பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதி ;
(எ) பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் பீடத்தின் பீடாதிபதி ;
(ஏ) நிறுவகத்தின் கற்கைநெறியின் துறைத்தலைவர் ;
(ஐ) பல்கலைக்கழகத்தின் அறிவியல் பீடத்தின் தாவர அறிவியல்த்துறைத் தலைவர் அல்லது துணைவேந்தரின் ஒருப்பாட்டுடனான அவரது நியமத்தர் ; அத்துடன்

(2) வேறு உறுப்பினர்கள், அதாவது :-

(அ) கமத்தொழில் நுட்பவியலையும் கமம்சார் வணிகக் கைத்தொழிலையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு ஆணைக்குழுவால் நியிமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் ;
(ஆ) பேரவையினால் அதன் உறுப்பினர்களிடையேயிருந்து நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் ;
(இ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்.
(ஈ) அதனது உறுப்பினர்களிடையே இருந்து கல்விசார் குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் ; அத்துடன்
(உ) துணை வேந்தரின் விதப்புரை மீது பேரவையினால் நியமிக்கப்பட்ட இரண்டு கமத்தொழில் சார் நிபுணர்கள் ;

(3) அதன் 16 ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"16. ஆராய்ச்சி மற்றும் உயர்பட்டங்கள் தொடர்பில் கற்கைச் சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) தவிசாளராக இருக்க வேண்டிய பணிப்பாளர் ;
(ஆ) ஒவ்வொரு கற்கைத்துறையின் தலைவர் ;

(இ) ஒவ்வொரு நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் அவர்களது நியமத்தர் ;

(ஈ) ஒவ்வொரு கற்கைத் துறையினாலும் பெயர் குறித்து நியமிக்கப்பட்டபிரதிநிதி ஒருவர் மற்றும் ஆராய்ச்சியிலும் மற்றும் அபிவிருத்தியிலும் அல்லது பட்டப்பின் கற்பித்தலிலும் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு நிலையத்தினாலும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் ;

(உ) ஒவ்வொரு இனங்காணப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தை ஒருங்கிணைப்பதற்கு கல்விசார் குழுவினால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள் ;

(ஊ) பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் தாவர விஞ்ஞானத் துறைத் தலைவரினால் அல்லது துணை வேந்தரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட வேண்டியவரான அத்துறையின் வேறொரு ஆசிரியர் ;

(எ) பல்கலைக்கழகத்தின் தொழினுட்ப பீடத்தின் கமத்தொழில் தொழினுட்ப துறைத் தலைவரினால் துணைவேந்தரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட வேண்டியவரான அத்துறையின் வேறொரு ஆசிரியர் ;".

EOG *05 - 0134*